“பாபூவ நகுஸ: தஸ்மின்னே அயிராவத இவ அம்புதௌ

எமிந்த்ர விஹமே தேவா: பதேதஸ்ய நெவீ விஷந்து”

100 அஸ்வமேவ யாகம் செய்தால் இந்திரன் ஸ்தானம் கிடைக்கும். அதே போல இந்த நகுஸன் என்பவன் சந்திர வம்சத்தில் தோன்றியவன். சந்திர வம்சத்தில் தோன்றினால் அது ஒரு பெருமை. சமுத்திரமான பாற்கடலை கடையும் பொழுது அதிலிருந்து உண்டானது அயிராவதம், அப்படி என்றால் யானை. அந்த யானைக்கு நான்கு தந்தங்கள் உண்டு. பாற்கடலில் இருந்து தோன்றிய அயிராவதம் போல் சந்திர வம்சத்திலிருந்து தோன்றியவன் நகுஸன் ஆகையால் அவனை அயிராவதத்திற்கு இனையாக ஒப்பிடுகின்றனர்.

அயிராவதம் என்ற யானை இந்திரனுக்கு பிடித்தது அதன் மீது தான் இந்திரன் பவனி வருவான். ஒரு சமயம் இந்திரன் அந்த இடத்தில் காணமல் போனான் அந்த இடத்திற்கு சமமாக நகுஸன் எனும் ராஜா சந்திர வம்சத்தில் தோன்றியவன் வந்தான். லோகத்தை காப்பாற்ற இந்திரன் வேண்டும் அவன் தான் சரியான நேரத்தில் பூமிக்கு தேவையான காற்று, மழை, வெயில், பனி பொழியுறது எல்லாமே செய்பவன் அதற்காக இந்திரனுக்கு பதிலாக நகுஸன் வந்தான்.

நகுஸனுக்கு தனி சிறப்பு உண்டு. அவன் நிறைய யாகங்கள் பன்னிருக்கான். அவன் 100 யாகங்களுக்கு மேல பன்னதால சோம ஹ்ருது அஸ்வமேத யாகம் பன்னினால் இந்திரன் என்ற ஸ்தானத்துக்கு செல்லலாம். ஆகையால் ச்ருஷ்டா என்ற இந்திரன் பையனை கொன்றுவிட்டான். அதனால அவனுக்கு ப்ரஹ்ம்மஹத்தி தோஷம் வந்துடுத்து. ப்ரம்மஹத்தி தோஷம் வந்ததால் அவனால் அந்த ஸ்தானத்தை அடைய முடியவில்லை.